## மார்ச் - 2

**"உண்மையுள்ளவைகள் எவைகளோ, ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ, (பயபக்திக்குகந்தவைகள்) அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்." - பிலி 4 : 8**

பொய்க்காவது (நேர்மையின்மைக்காவது) அல்லது மிகைப்படக் கூறியவைகளுக்காவது அனுதாபங்காட்டுகிற எவனும் கிட்டத்தட்டத் தன்னையே அசுசியாக்கிக் கொண்டிருக்கிறான். தன்னுடைய எண்ணங்களை சுத்தப்படுத்தி, மிகைப்படக் கூறப்பட்ட காரியங்களை எவன் விலக்குகிறானோ, அந்த அளவிற்கு அவன் தன் மனதையும், தனது முழு குணத்தையும் சுத்தப்படுத்திக் கொண்டிருக்கிறான். விஷயங்களின் உண்மையின் நிச்சயத்தை உடையவர்களாயிருக்கிறோம் என்பது போதுமானதல்ல. அவைகளை நாம் இன்னும் சோதித்துப் பார்க்கவும், எந்த அளவிற்கு அவைகள் கனமுள்ளதாயும், மேன்மையுள்ளதாயும் இருக்கின்றன என்று கண்டுகொள்ள வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். ஏனென்றால், கர்த்தர் நமது குணங்களின் இழிவான அம்சங்களைத் தனது சொந்தப் புண்ணியத்தினால் இதுவரை மூடியிருந்தாலும் முடிவுவரை அவைகளை மூட விருப்பம் தெரிவித்தாலும், நாம் விழுந்துபோன நிலைமைக்கு அனுதாபங்காட்டக் கூடாது. ஆனால் அதற்கு மாறாக, உண்மையான மகத்துவத்தையும், மிக உயர்ந்த கனத்தின் அளவையும் நமது இருதயங்களிலும், நமது எண்ணங்களிலும், தேவனோடும், நம்மை ஒத்த மற்றவர்களோடும் நாம் வைத்திருக்கிற விவகாரங்களிலும் பெற வேண்டும். **-Z ’03, 9 (R 3129).**

உண்மையான காரியங்கள், தேவனுடைய ஏற்பாட்டின் காரியங்களாக இருக்கின்றன. எவைகள் போற்றத்தக்கதாகவும், புனிதமானதாகவும், பரிசுத்தமுள்ளதாயும், பயபக்தியுடன் நடந்து கொள்ளுவதற்காக எண்ணப்பட வேண்டியவைகளோ, அவைகளே பயபக்திக்குத் தகுதியான காரியங்கள். அப்போஸ்தலன் இந்தக் காரியங்களைத் தியானிக்க ஜனங்களுக்குப் புத்தி சொல்லுகிறார். ஏனென்றால், அந்தவிதமான தியானம் உண்மையான ஞானத்தைக் கொடுத்து அதை இருதயத்திலும், மனதிலும் அபிவிருத்தி செய்கிறது. அந்த ஞானம் முதலில் சுத்தமாயும், பின்பு சமாதானமும், சாந்தமும் இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும், நற்கனிகளாலும் நிறைந்ததாயும் பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது. **-P ’33, 45.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யாத் 34:6; சங் 33:4 91:4; நீதி 3:3; ஏசா 65:16; தானி 4:37; 10:21; சகர 8:16; யோவா 8:31,32; 14:6; 17:17; எபே 4:25; 2தீமோ 2:15; லேவி 19:35,36; உபா 25:13-16; சங் 24:4; ஏசா 33:15,16; அப் 24:16; 2கொரி 4:1,2; 8:21; 1தெச 4:11,12; எபி 13:18; 1பேது 2:12.

**கோபுர வாசிப்பு : Z ’11, 165 (R 4838).**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் உண்மையும், நற்கீர்த்தியுள்ளதுமான காரியங்களைத் தியானித்துக் கொண்டிருந்தேனா? எப்படி? ஏன்? பலன் என்ன?